


ஹமாஸின் பெருந்தலைகளைப் பார்த்தோம். தெரிந்துகொள்ளவேண்டிய அடுத்த முக்கிய விஷயம், அவர்களது ராணுவம். இந்த நிமிடம் வரை ஹமாஸின் ராணுவத்தில் எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று, யாரிடமும் பெயர்ப்பட்டியல் கிடையாது. ஓராயிரமாக இருக்கலாம். சில ஆயிரங்களாக இருக்கலாம். பல ஆயிரங்களாகவும் இருக்கலாம். நவீன ஆயுதங்கள், ராக்கெட்டுகள், ராக்கெட் லாஞ்சர்கள், டாங்குகள், கம்ப்யூட்டர்கள், சாட்டிலைட் தொலைபேசி வசதிகள் என்று சகலமும் உண்டு. அதேசமயம், நாட்டுத்துப்பாக்கிகள், கையெறி குண்டுகள், வெங்காய வெடிகளுக்கும் பஞ்சமில்லை. பணம் இருக்கிறபோது, கிடைக்கிற ஆயுதங்களை வாங்கிச் சேகரிப்பது ஒரு பக்கம். இஸ்ரேலிய முகாம்களில் தாக்குதல் நடத்தி வெற்றி பெறும் சந்தர்ப்பங்களில், அபகரித்து வருபவை இன்னொரு பக்கம்.

ஆயுதமா முக்கியம்? ஏந்துபவர்கள் அல்லவா?

அல் காஸம் என்கிற பெயரில், 1992-ம் ஆண்டு முறைப்படி, ஹமாஸின் ராணுவம் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னரும், அவர்கள் பல தீவிரச் செயல்களில் ஈடுபட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். அவ்வப்போது சில கொலைகள், ஓரிரு ஆள் கடத்தல்கள் இன்னபிற. அத்தனையும் இஸ்ரேலிய இலக்குகளின்மீதுதான்.

ஆனால், சரியான ராணுவ ஒருங்கிணைப்பு இல்லாமையால், அடிக்கடி ஹமாஸ் வீரர்கள் இஸ்ரேலிய ராணுவத்திடம் சிக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. கைது செய்து அழைத்துப் போகப்படுபவர்கள் திரும்பி வருவது அநேகமாகச் சாத்தியமில்லை. ஷேக் அகமது யாசின் போன்ற மிகப்பெரிய தலைவர்களுக்கே ஆயுள் தண்டனை, இரட்டை ஆயுள் என்று தண்டனைகளை அள்ளி வீசிக்கொண்டிருந்த இஸ்ரேல் ராணுவமும் நீதித்துறையும், சாதாரணப் போராளிகள் விஷயத்தில் என்ன செய்திருக்கக் கூடும் என்பதை விளக்க வேண்டாம் அல்லவா?

தொண்ணூறு அல்லது தொண்ணூற்றொன்றாம் ஆண்டு, யாஹியா அயாஷ் என்கிற ராணுவ வீரர், பிறகு ஹமாஸின் தீவிர உறுப்பினராகி, போராளிகளுக்குப் பயிற்சி அளிக்கத் தொடங்கிய பிறகுதான், சொல்லிக்கொள்ளும்படியான ராணுவ பலம் ஹமாஸுக்கு வாய்த்தது என்று சொல்லலாம்.

எலக்ட்ரிக்கல் இன்ஜினீயரிங் படித்த யாஹியா அயாஷ், ஒரு வெடிகுண்டு விற்பன்னர். தயாரிக்கத் தெரியும். பயன்படுத்தத் தெரியும். கற்றுத்தரவும் தெரியும் அவருக்கு. அதுநாள் வரை ஹமாஸ் கள்ள மார்க்கெட்டிலும் கடத்தல் மார்க்கெட்டிலும், குண்டு வாங்கிக்கொண்டிருந்தது. ஏகப்பட்ட செலவு. அயாஷ்தான் மூலப்பொருள்கள் கிடைக்கக்கூடிய இடங்களைச் சுட்டிக்காட்டி, வரவழைத்து, தானே முன்னின்று செய்முறை விளக்கமெல்லாம் சொல்லி, ஹமாஸுக்கான பிரத்தியேகக் குண்டுகளைத் தயாரித்து அளித்தவர்.

தவிரவும், இயல்பிலேயே அவருக்கு இருந்த போராட்டக் குணம், தலைமைப் பண்புகள், யுத்தத் தேர்ச்சி ஆகியவை அவரை மிக விரைவில் ஹமாஸின் தளபதி ஆக்கின. இன்னொரு காரணமும் உண்டு. யூதர்கள் மீது அவருக்கு இருந்த வெறுப்பும் கோபமும் வெளிப்படும்படியானதொரு சம்பவம்.

அயாஷ் முதல் செட் குண்டுகளைத் தயாரித்து முடித்தபோது, அவற்றைப் பரிசோதித்துப் பார்க்க விரும்பினார். ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவைத் தமக்குத் தாமே நிர்ணயித்துக்கொண்டு, ஏழெட்டு இஸ்ரேலிய இலக்குகளின்மீது அடுத்தடுத்துத் தாக்குதல்களை நடத்தினார். பலி எண்ணிக்கை எழுபது என்றது இஸ்ரேல் ராணுவம்.

போதாது? அருமையான குண்டுகள். அற்புதமான தளபதி என்று மகிழ்ந்து போனார்கள் ஹமாஸ் போராளிகள்.

குறிப்பாக, பி.எல்.ஓவும் இஸ்ரேலிய அரசும் நார்வேயின் சமரச முயற்சிக்கு ஒப்புக்கொண்டு, ஓஸ்லோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட சந்தர்ப்பத்தில், ஹமாஸின் எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாக, அயாஷ் மேற்கொண்ட இந்தத் தாக்குதல்கள், சர்வதேச அளவில் மிகப்பெரிய சலசலப்பை உருவாக்கியதை மறுக்க முடியாது.

எதிர்ப்பைச் சொல்ல எழுபது கொலைகளா? கொஞ்சம் அபாயம்தான். இஸ்ரேல் அரசே இதை எதிர்பார்க்கவில்லை. அன்று தொடங்கி 1996-ம் ஆண்டு வரை அயாஷை, அவர்கள் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தார்கள். அவர் பாலஸ்தீனிலேயேதான் இருந்தார். சமயத்தில், டெல் அவிவுக்குக் கூட டூர் போய்விட்டு வருவார். ஆனாலும் நெருங்க முடியாது! அப்படி, காற்றில் கரைந்தே வாழ்ந்தவர் அவர். 1996-ல் ஓர் ஏவுகணைத் தாக்குதலில் அவரைத் தீர்த்துக்கட்டும்வரை இஸ்ரேல் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

யாஹியா அயாஷ், ஹமாஸின் ராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற சமயத்தில், அவருக்கு இடப்பட்டிருந்த ஒரே கட்டளை, பி.எல்.ஓ.வின் சமரச முயற்சிகள் அனைத்துக்கும் ஆயுத பதில் அளிக்க வேண்டும் என்பதுதான். பி.எல்.ஓ ஹமாஸ் மோதல்கள் பகிரங்கமாக வெளிப்பட்டிருந்த சந்தர்ப்பம் அது. இஸ்ரேலுடன் அராஃபத் சமரசம் பேசுவதையோ, ஒப்பந்தங்கள் போடுவதையோ அவர்கள் அறவே விரும்பவில்லை. எத்தனை எடுத்துச் சொன்னாலும் அராஃபத் கேட்பதில்லை என்கிற கோபம். அராஃபத்தை இஸ்ரேல் ஏமாற்றுகிறதே என்கிற வெறுப்பு. இந்த இரண்டும்தான் காரணங்கள்.

ஆகவே, ஓஸ்லோ உள்ளிட்ட எந்த ஒப்பந்தமும் நடைமுறைப்படுத்தப்படாமல், கிடப்பில் போடப்படவேண்டும். அதற்கேற்ப தாக்குதல்கள் இருக்கவேண்டும் என்று அயாஷ் தீர்மானித்தார்.

முதல் காரியமாக, ஹமாஸின் அத்தனை வீரர்களின் முகங்களும் மறைக்கப்படவேண்டும். அதாவது, எங்கும் தாக்குதல் நடக்கும், எப்போதும் தாக்குதல் நடக்கும். தாக்குவது ஹமாஸ் என்பதுதான் தெரியவேண்டுமே தவிர, தனி நபர்களின் முகங்களோ, பெயர்களோ எங்கும் வெளியாகிவிடக்கூடாது.

இதற்காக, வீரர்கள் அத்தனை பேருக்கும் கறுப்பு நிற முகமூடிகளை அளித்தார் அயாஷ். யாரும் முகம் காட்டக்கூடாது. கண்கள் மட்டும்தான் தெரியலாம். நெற்றிப்பட்டையாக பச்சை நிற ஹமாஸ் பெயர் பொறிக்கப்பட்ட கர்ச்சீப் சுற்றப்பட்டிருக்கும். பொதுமக்கள் விரும்பினால், அவர்களுக்கும் இந்த முகமூடி அளிக்கப்படும். அவர்கள் போரிட வேண்டுமென்கிற அவசியமில்லை.

இப்படி ஓர் ஏற்பாட்டை அவர் செய்யக் காரணம் உண்டு. யுத்தத்தில் எத்தனை ஹமாஸ் வீரர்கள் பலியானாலும் ஆள்கள் குறைந்ததுபோலத் தெரியவே தெரியாது. எங்கும் கறுப்பு முகமூடி. எங்கும்

ஹமாஸ் என்கிற தோற்றம் மட்டுமே இருக்கும்.

யாஹியா அயாஷின் பயிற்சி முறைகள் மிகவும் அபாயகரமானவை. ஓடிக்கொண்டே சுடுவது, குதித்துக்கொண்டே சுடுவது. ஓடும் பஸ்ஸில் ஏறி குண்டு வைத்துவிட்டு, ஓடும் நிலையிலேயே இறங்கித் தப்பிப்பது என்று, நிறைய ஜகஜ்ஜாலங்களைக் கற்றுக்கொடுத்தவர் அவர். உடல் முழுவதும் வெடிகுண்டைக் கட்டிக்கொண்டு, பதினைந்து செகண்டில் வெடிப்பது போல் செட் பண்ணிவிட்டு, அதற்குள் நூறு மீட்டர் தொலைவை ஓடிக்கடக்க வீரர்களை அவர் வற்புறுத்துவார். ஓடி நின்று, தானே வெடிகுண்டையும் செயலிழக்கச் செய்யவேண்டும்.

இம்மாதிரியான பயிற்சிகள், ஹமாஸின் இளம் போராளிகளுக்கு மிகுந்த உத்வேகத்தையும் உயிரைத் துச்சமாக நினைக்கும் மனோபாவத்தையும் அளித்தன. மரணத்தின் வரவேற்பறைக்கு அவர்கள் தினசரி போய்வந்துகொண்டிருந்தபடியால், முழு வீட்டையும் சுற்றிப்பார்ப்பதில் அவர்களுக்கு அச்சமே இல்லை.

தவிரவும், தற்கொலைப் படை வீரர்களை அவர் தயார் செய்த விதம், சர்வதேச அளவில் பயங்கரவாத இயக்கங்கள் மத்தியில் மிகுந்த வியப்புடன் பேசப்பட்டது. மரணத்துக்குப் பிந்தைய சொர்க்கம் குறித்த அவரது சொற்பொழிவுகள், ஹமாஸில் மிகுந்த புகழ்பெற்றவை. வண்ணமயமான உலகம். அருவிகளும் ஜீவ நதிகளும் ஆங்காங்கே பாயும். சோலைகள் மிகுந்திருக்கும். மனிதர்களும் வானவர்களும் அதுவரை பார்த்திராத தேவ கன்னியர்கள் சேவை புரிவார்கள். சுகபோகங்கள் கொட்டிக்கிடக்கும். பூமியில் பார்க்கவே முடியாத சுகங்கள் அவை.

திருக்குர்ஆனிலேயே இது பற்றிய குறிப்புகள் உண்டு. அயாஷின் விவரிப்பில் அந்த வரிகள் மேலும் ஜொலிக்கும்.

லட்சியத்துக்காக மதத்தையும் மரணத்தையும், ஒரு நேர்க்கோட்டில் இணைக்கும் முயற்சி அவருடையது. இடையில் இருக்கிற வாழ்க்கை, போராட மட்டும் என்பது அவருடைய சித்தாந்தம். ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலின் நிரந்தரத் தலைவலி ஆனதற்கு அயாஷ் மிக முக்கியக் காரணம்.

அயாஷிடம் பயிற்சி பெற்ற ஹமாஸ் வீரர்கள், கண்மண் தெரியாமல் தாக்கத் தொடங்கி, ஒரு கட்டத்தில் சமாளிக்கவே முடியாத அளவுக்குப் போனார்கள்.

உதாரணத்துக்கு, ஜபாலியா (Jabalia) அகதி முகாம் மீட்பு யுத்தத்தைச் சொல்லலாம்.

ஜபாலியா என்பது காஸா பகுதியில் உள்ள ஒரு கிராமம். மொத்த பரப்பளவே ஒன்றரை சதுர கிலோ மீட்டர்தான். இந்தச் சிறு வட்டத்துக்குள் சுமார் ஒன்றே கால் லட்சம் மக்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். அத்தனை பேரும் அகதிகள். ஒரு கிராமமே அகதி முகாம் ஆக்கப்பட்டிருந்தது. உலகிலேயே மக்கள் தொகை அடர்த்தியில் அதுதான் நம்பர் ஒன் பிரதேசம்.

இஸ்ரேலிய ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த முகாமை, மீட்பது என்கிற திட்டத்துடன் களமிறங்கியது ஹமாஸ். 1987-ல் தொடங்கிய முதல் இண்டிஃபாதாவில் பங்குபெற்று, ஏற்கெனவே ஜபாலியா மக்கள் மிகுந்த பாதிப்புகளுக்கு உள்ளாகி, நொறுங்கிப் போயிருந்தார்கள். இஸ்ரேலின் அடக்குமுறைகள் சொல்லும் தரத்தில் இல்லை. கிரிமினல் கைதிகளைப் போல் அங்கே அகதிகளை அவர்கள் சித்திரவதை செய்துகொண்டிருந்தார்கள்.

இது பொறுக்காமல்தான், ஹமாஸ் ஜபாலியாவை மீட்கும் போராட்டத்தைக் கையில் எடுத்தது.

முதலில் சில நூறு ஹமாஸ் போராளிகள் அகதி முகாமுக்குள் ஆயுதங்களுடன் அனுப்பப்பட்டனர். அவர்களை முகாம் வாசிகள் அடைகாத்தார்கள். சரியாகப் பதுங்கிக்கொண்டு அவர்கள்

அங்கிருந்தே இஸ்ரேலிய கிராமங்களின்மீது ராக்கெட் தாக்குதலை ஆரம்பித்தார்கள்.

குறைந்த தூரம் பறந்து சென்று தாக்குகிற ராக்கெட்டுகள் அவை. முதலில் பெரிய பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. ஆனால், முதன்முதலில் இரண்டு யூதச் சிறுவர்கள் மீது ராக்கெட்டுகள் மோதி, உயிரைப் பறித்தபோது இஸ்ரேல் தன்னுடைய பதில் தாக்குதலை ஆரம்பித்தது.

ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய வீரர்கள் ஜபாலியாவை நோக்கி வரத் தொடங்கியவுடனேயே, ஹமாஸின் வீரர்கள் அவர்கள் வரும் பாதைகளை அழித்தார்கள். ஆங்காங்கே மிகப்பெரிய குழிகள் தோண்டி, அதனுள் பதுங்கிக்கொண்டு, இடைவிடாமல் ராக்கெட் அடித்துக்கொண்டே இருந்தார்கள்.

மீறி நெருங்கும் இஸ்ரேலியர்களை ஹமாஸின் தற்கொலைப்படை ஜீப்புகள் மோதி அழித்தன.

மிக உக்கிரமான யுத்தம் அது. இரு தரப்பிலும் கண்மண் தெரியாமல் அடித்துக்கொண்டார்கள். முகாமுக்குள் எத்தனை போராளிகள் இருக்கிறார்கள் என்கிற விஷயம், இஸ்ரேலிய ராணுவத்துக்குத் தெரியாது. முகாமைச் சுற்றி வளைக்க முடியாமல், நான்கு புறங்களிலும் ஹமாஸின் தற்கொலை ஜீப்புகள் தயாராக இருந்தன. ஓரணி போய் உயிரை விட்டால், அடுத்த அணி உடனே வந்து 'எஸ் சார்' என்று சொல்லும். போரிட்டு வெல்ல நினைப்பவரை எதிர்த்துப் போரிடலாம். சாவதற்காகப் போரிடுகிறேன் என்று குண்டு கட்டிக்கொண்டு வருபவர்களை எதிர்த்து நிற்கவா முடியும்? ஓடித்தான் போகவேண்டும்.

இடைவிடாமல் தாக்குதல் நடந்தது. பாலஸ்தீனியர்கள் தரப்பில் 133 பேர் இறந்தார்கள். அதில் சரிபாதி ஹமாஸ் போராளிகள். பெரும்பாலும் தற்கொலைப் படையினர். சுமார் நூறு வீடுகள் தரைமட்டமாயின. யூதர்களில் இருபது பேர் (ராணுவத்தினர் அல்லர்.) இறந்தார்கள். இறந்த ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை வழக்கம்போல் இஸ்ரேல் அரசு மறைத்தது.

இறுதி முடிவு ஒன்றுதான். தாக்குப்பிடிக்க முடியாமல், முகாமைக் கைவிட்டுத் திரும்பியது இஸ்ரேலிய ராணுவம். இந்தத் தோல்விக்கு இஸ்ரேல் மிக வினோதமான காரணம் ஒன்றைச் சொன்னது. மிகவும் காமெடியான காரணமும் கூட.

ஐ.நாவின் புனரமைப்புப் படை ஒன்று, அப்போது பாலஸ்தீனில் தீவிரமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தது. நிவாரணப் படை என்று சொல்லலாம். அந்தப் படை, தன்னுடைய வாகனங்களை ஹமாஸ் போராளிகளுக்கு அளித்து உதவி செய்ததால்தான், இஸ்ரேலிய ராணுவம் பின்வாங்க வேண்டி வந்தது என்றது இஸ்ரேலிய அரசு.

பாதிக்கப்பட்ட மக்களை மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்ல, ஐ.நாவின் ஆம்புலன்ஸ்கள் அங்கே வந்தது உண்மையே. அந்த ஆம்புலன்ஸுகளில் ஒளிந்து சில போராளிகள் தப்பியிருக்கலாம் அல்லது தகவல் பரிமாற்றங்களுக்கு அந்த வாகனங்களைப் பயன்படுத்தியிருக்கலாம்.

ஆனால், அது மட்டுமே எப்படி இஸ்ரேலின் தோல்விக்குக் காரணமாக முடியும்?

யாரும் கேட்கவில்லை. சிரித்துக்கொண்டார்கள். அவ்வளவுதான்.

ஆனால், இஸ்ரேலின் வெறி அதிகரித்தது. இதற்கான பதிலடியை மிக மோசமான முறையில் தருவதுதான் நியாயம் என்று முடிவு செய்தார்கள்.